செய்தி வெளியீடு எண்: 03/2018 நாள்: 02.01.2018

**எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலுக்கு முன் வார்டுகள் மறு சீரமைப்பது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக் கேட்புக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலுக்கு முன் வார்டுகள் மறு சீரமைக்கப்பட்டது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

வேலூர் மாவட்டத்தில் தமிழக தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்பு வார்டுகளை மறுசீரமைப்பு செய்து பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் உள்ள 40 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 390 ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 743 ஊராட்சி தலைவர்கள், 6,078 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், ஒரு மாநகராட்சி மேயர், 11 நகராட்சி தலைவர்கள், 16 பேரூராட்சி தலைவர்கள், 60 மாநகராட்சி வார்டு உறுப்பினர்கள், 324 நகராட்சி வார்டு உறுப்பினர்கள், 252 பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ஆகியோர்களை தேர்ந்தெடுப்பதற்கான வார்டுகள் மறு சீரமைப்பு பணிகள் நடைபெற்று பட்டியல்கள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் கடந்த 27 ஆம் தேதி ஒட்டப்பட்டது. இப்பட்டியலின் மீது ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகள் இருந்தால் பொதுமக்கள் அலுவலரிடம் தெரிவிக்க இன்று (02.01.2018) கடைசி நாளாக இருந்தது. பொதுமக்கள் கோரிய அவகாசத்தின் பேரில் காலநீட்டிப்பு செய்து 04.01.2018 அன்று வரை ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகள் பெறப்படும். இக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுடைய ஆட்சேபனைகளையும் கருத்துகளையும் மனுக்களாக அளித்திட்டால் அம்மனுக்கள் மீது முறையாக விசாரனை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை இக்கூட்டத்தில் தெரிவித்து வழங்கினர்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.லதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.பிச்சாண்டி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சு.ரவி, திரு.லோகநாதன், திரு.ப.கார்த்திகேயன், திரு.ஈஸ்வரப்பன், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மாநகராட்சி ஆணையாளர், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர்-9.

2/1/18